தெணியான்

# உள்ளம்

(மாத சஞ்சிகை) பங்குனி 89.



விலை 4/- வளர்மதி வெளியீடு

Computer Programming

in

* basic * cobol

* d BASE III+

* word processing

Practical on IBM

UNIKCO COMPUTER

CENTRE

no.5 power house

2nd lane jaffna.

கொக்குவில் வெற்றி தரும் முயற்சி
வளர்மதி முன்னேற்றக் கழகம்

# உள்ளத்திலிருந்து...

மதி: 1 பிறை: 2

## "வாருங்கள் தோள் தாருங்கள்"

சென்ற மாதம் கையெழுத்துப் பிரதியாக வெளிவந்த 'உள்ளம்' பெரியோர்களும், வாசகர்களும் தந்த ஊக்கத்தினால் இவ்விதழிலிருந்து சஞ்சிகையாகப் பரிணமித்திருப்பது குறித்து எமதுள்ளம் உவகை கொள்கிறது, ஊக்கம் பெறுகிறது.

கலை இலக்கியத் துறையில் நன்கு வளர்ந்த, வளர்ந்து வருகின்ற படைப்பாளிகளின் ஆக்கங்களை, தரமான படைப்புகளை நுகரத் துடிக்கும் வாசக உள்ளங்களுக்குத் தருவதே எமது நோக்கம்.

ஒரு சிறந்த சமூகப்பணியை மேற்கொள்ள வேண்டுமென்ற வேணவாவுடன் எம்மால் தொடங்கப்பட்டிருக்கும் இப்பணி மிகவும் கடினமானதென்பது யாவரும் அறிந்ததே. வாசகர்களாகிய உங்களின் ஆதரவும், ஊக்கமும்தான் இதில் ஏற்படக்கூடிய தடைகளைத் தவிடுபொடியாக்கி உள்ளத்தின் உயர்வுக்கு உழைக்க உறுதுணை புரியும் என்பது எமது அசைபாத நம்பிக்கை.

எமது இச்சிறு முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து உள்ளத்தின் உயர்வுக்கு ஓர் உறுதியான அடித்தளமிடுவதும், 'உள்ளம்' பற்றிய திறனாய்வுகளை முன் வைத்து எம்மை நெறிப்படுத்துவதும் வாசகர்களாகிய உங்கள கடமையாகும்.

எனவே ஈழத்துக் கலை இலக்கிய உலகில் ஏற்கனவே அமைதியாக வீறுநடை போட்டுக் கொண்டிருக்கும் மூத்த சஞ்சிகைகளுடன் இச்சிறு குழந்தையான உள்ளமும் கைகோத்துப் புரட்சிப்பணி புரிந்திட வாசகர்களே. "வாருங்கள் தோள் தாருங்கள்."

நன்றி

ஆசிரியர் குழு,
— உள்ளம். —

தெணியான்

# கழகச் செய்திகள்.

- 'உள்ளம்' கையெழுத்துப் பிரதியின் வெளியீட்டு விழா கடந்த 5.02.89 ஞாயிறு பி.ப 4.00 மணிக்கு வளர்மதி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் வி. சர்வேஸ்வரக் குருக்கள் ஐயா அவர்கள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார். முதலாவது கையெழுத்துப் பிரதியை கழகக் காப்பாளர் திரு. சி. பொ. வேலாயுதபிள்ளை அவர்கள் வெளியிட்டு வைத்து உரையாற்றினார். கழக ஆலோசகர்களான திரு. து. வைத்திலிங்கம், திரு ஆ. தங்கராஜா ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

- கொக்குவில் மத்தி பகுதியில் நான்கு ஆண்டுகள் திறமையுடன் பணிபுரிந்த கிராமச்சேவையாளர் திரு. ந. ஜெகதீஸ்வரனின் இடமாற்றத்தையொட்டியும், புதிய கிராமசேவையாளரான திரு S. சந்திரகுமாரின் வருகையையொட்டியும் வளர்மதியினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சியொன்று 12.02.89 ஞாயிறு பி.ப 4.00 மணிக்குக் கழக மண்டபத்தில் நடைபெற்றது.

- வளர்மதி முன்னேற்றக் கழக சிறுவர் பாடசாலைக் கட்டட நிதிக்காக நடத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு கடந்த 15.02.89 புதன் கிழமை பி.ப. 4.00 மணிக்கு கழக மண்டபத்தில் நடைபெற்றது

  அதிஷ்டசாலிகள்:-

  முதலாம்பரிசில் (றைஸ் குக்கர்) இலக்கம் 1008, விநாயகர் ரேடர்ஸ்
  பொற்பதி வீதி, கொக்குவில்.

  இரண்டாம் பரிசில் (சுவர்க்கடிகாரம்) இலக்கம் 416.
  K. கமலநாதன், மாவிட்டபுரம், தெல்லிப்பளை.

  மூன்றாம் பரிசில் (மின்சார ஸ்திரிக்கைப் பெட்டி) இலக்கம் 379.
  S. தயானந்த விகாரைவீதி நாவெல, பெந்தோட்ட

- யாழ்/முஸ்லிம் விளையாட்டுக் கழகத்திற்கும் வளர்மதி விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியொன்றில் முஸ்லிம் விளையாட்டுக் கழகம் 5:1 கோல்களால் வெற்றிபெற்றது. இப்போட்டி யாழ்/ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் 19.02.89 (ஞாயிறு) பி.ப 5.00 மணிக்கு நடைபெற்றது.

- வளர்மதியின் தொடக்ககால ஆலோசகரான காலஞ்சென்ற திரு செ. ஆறுமுகம் (சட்டத்தரணி) அவர்களின் புதல்வர்களால் அரை பரப்புக் காணி வளர்மதிக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

# உள்ளத்தின் உள்ளே....

கோகிலா மகேந்திரன்
புத்தொளி
கொக்கூர்கிழான்
கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை
மா. சின்னத்தம்பி
கே. எஸ். சுதாகர்
குறும்பனைநாடன்
செ. ஜோ. புவிநாயகம்
வை. சிவநேசன்
கு. கிருஷ்ணகுமார்
வடமுதுபுலவியனார்

**இவர்களைக் காணுங்கள்**



# கண்பாரவை இழந்த பின்பும் கலைத்தொண்டு

ஏ. ரி. பொன்னுத்துரை

'பீத்மபூஷண்' சப்பந்தமுதலியாருக்கு எழுபத்தைந்துவயதில் பார்வை மங்கியது; பார்வையை இழந்தார். ஆனால். கருத்துப் பார்வை தொழிற்பட்டது. ஹோமர், மில்டன் போன்ற கலா மேதைகள் பார்வை இழந்த போதும் இலக்கிய ஆக்கங்களில் ஈடுபட்டதுபோல. இவரது கலைத்தொண்டும் தொடர்ந்தது வாய்மொழியாகச் சொல்லி பேத்தியைக்கொண்டு எழுதுவித்து பல ஆக்கங்களை நூலுருப் பெறச் செய்தார் ''நான் குற்றவாளி'' ''தமிழ் அன்னை பிறந்து வளர்ந்த வரலாறு'' ''நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும்'' போன்றவை இக்காலகட்டத்தில் வெளிவந்த நூல்களாகும். முதுமையிலேயே முனைப்பூச்சத்துடன் கலைவளர்த்தார் என்றால் இளமைத்துடிப்பு எத்துணை விசையுடன் கலையுலகை வளமாக்கியிருக்க வேண்டும்.

ஐம்பத்தைந்தாவது வயதில் நீதிடதி வேலையிலிருந்து ஓய்வு பெறறதும் இவரது தளரா நாட்டம் மேடையைப்பேணிட துரித ஓட்டம் கொண்டது. அந்தக்காலகது ஆந்திர நாடகத்தந்தை பல்லாரி திருவி. கிருஷ்ணமாச்சார்லுபம்மல், சமபந்தரைப் பார்த்து. சிறந்த வழக்கறிஞராக மிளிரவேண்டுமெனில் நாடகத்துக்கு முழுக்குப்போட வேண்டுமெனக் கூறியபோது, 'நாடுதனைக் காக்கும்நடிகன் எனவிளங்கிடுவேன்' எனக்குரல் கொடுத்தார். தொண்ணுற்றேழு நாடகங்களை எழுதிக்துவித்தார். இந்தியனும் ஹிட்லரும்' போன்ற அரசியல் பிரசார நாடகங்களையும் வெளியிட்டார் 'பழையவர்' எனப் பலரும் கிண்டல் செய்யலாம், ஆனால் நாடகங்களை மொழிபெயர்த்தும் மேடையேறி நடித்தும், நடிப்பித்தும் உரையரங்குகள் மூலம் ஊக்குவித்தும் சீரழிந்த நாடகத்துறையைப் புத்துயிர் பெறவைத்தவர் சம்பந்த முதலியார்.

- உறுதியானஉள்ளம் படைத்தவர்களுக்கு மேருவின் சிகரம் உயர்ந்ததல்ல பாதாள உலகமும் மிகத் தாழ்ந்ததல்ல பரந்த மகா சமுத்திரமும் எல்லையற்றதல்ல.
- நீதி நூல்களைப் படித்த பிறகும் ஒருவன் முட்டாளாக இருக்கக்கூடுமே. அவற்றின் படி நடப்பவனே அறிவாளி. நோயுளளவன் கதைப்போக்கும் மருந்தின் பெயரை சிந்தித்து வந்தால் என்ன. அதமட்டுமே அவனுக்கு ஆரோக்கியத்தைக் கொடுத்து விடுமா?

# சூழல் பாதுகாப்பு

கடந்த சில ஆண்டுகளாக மேற்குநாடுகளில் முக்கியமாக கைத்தொழில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் பரவலாக கவனத்திற்கு எடுக்கப்படும் விடயம் சூழலை எப்படிப் பாதுகாப்பதென்பதாகும். விஞ்ஞானத்தின் அபரிமித வளர்ச்சியுடன் இயற்கையைக் கட்டுப்படுத்தவும் அதனை தனக்குச் சாதகமாக மட்டின்றி உபயோகித்துக் கொண்டிருந்த மனிதன் தான் தொடர்ந்தும் அதனைச் செய்து கொண்டிருக்க முடியாது என்ற உண்மையை அறிந்து கொண்டதே அவனின் இந்த அக்கறைக்குக் காரணம். மனிதனின் இச்செய்கையால் இயற்கை வளங்கள் குறைந்து கொண்டு போனது மட்டுமன்றி விளைவுகளாகத் தோன்றிய பலதரப்பட்ட கழிவுப் பொருட்கள் மனிதனது சூழலை பல கோணங்களில் அசுத்தப் படுத்தின. இப்படியான நீண்டகால அல்லது உடனடியான சூழல் மாற்றங்கள் மனிதனையும் மனிதனைச் சார்ந்தவற்றையும் நேரடியாகப் பாதிக்கத் தொடங்கிய போதுதான் மனிதன் சூழல் மாசடைவதை ஒரு பிரச்சனையாக விளங்கிக்கொண்டான்.

பாரிய தொழிற் சாலைகளில் குறிப்பிட்ட சில பொருட்களின் உற்பத்தியின்போது உருவாக்கப்படும் தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுப் பொருட்கள் சூழலில் கவனமின்றி விடப்பட்டு அவை சூழலை மாசுபடுத்துவதன் மூலம்தான் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. உண்மையில் ஒரு குறிப்பிட்ட கழிவுப்பொருளை உண்டு பண்ணும் மனிதன் கழிவுப் பொருளால் நேரடியாகப் பாதிக்கப் படும் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவானவையாகும். உதாரணமாக குளிரூட்டப்பட்ட வாகனமொன்றினுள் பயணம் செய்யும் ஒருவர் சுத்தமான காற்றையே எப்போதும் சுவாசிப்பார். ஆனால் குளிரூட்டி செயற்படும்போது வெளிவிடப்படும் அசுத்தமான வாயுக்களை வீதியில் போகும் மற்ற மனிதர்கள் சுவாசிப்பதால் பாதிக்கப் படுகின்றார்கள் மேற்குறிப்பிட்ட காரணத்தால் பல தொழிற் சாலைகள் தாம் வெளியேற்றும் அந்தப் பொருட்களை சூழலுக்கு வெளியேற்றாமல் தடை செய்யும் முயற்சிகளைத் தாமாகவே செய்ய முன் வருவதில்லை. ஆகையால் இச்செய்கையால் பாதிக்கப்படும் பொதுமக்களைப் பாதுகாக்க அரசினால் அதிகாரம் வழங்கப்பட்ட ஸ்தாபனங்கள் உருவாக்கப்பட்டன. இந்த ஸ்தாபனங்கள் ஆராய்ச்சிகள், தரவுகள், புள்ளி விபரங்கள் என்பனவற்றைக் கொண்டு தத்தமது நாட்டிற்கேற்ப பல சட்ட திட்டங்களை நடை முறையில்

கொண்டு வந்தன. இச்சட்ட திட்டங்களின்படி எமது நாட்டிலும் கூட மிக அபாயமான கழிவுப் பொருட்களை வெளியேற்றும் சில தொழிற்சாலைகள் மூடப்படுமாறு கோரப்பட்டுள்ளன. இன்னும் பல அதிக ஆபத்தில்லாத கழிவுப் பொருட்களை வெளியேற்றும் தொழிற்சாலைகள் அக்கழிவுப் பொருட்களை அபாயமற்றவையாக மாற்றும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளன. இல்லையேல் அவை பாரியதொரு தொகையை அரசாங்கத்திற்கு குற்றப்பணமாகச் செலுத்த வேண்டி வரும். இவ்வகையான ஸ்தாபனங்களின் முக்கிய பணிகள் மேற்குறிப்பிட்டவை எனினும் அவைகளின் இன்னொரு பணி பின்பு கருத்திற்கொள்ளப்படும்.

இதே போன்று பிரச்சினையை ஓரளவு கட்டுப்படுத்துவதற்கு வேறொரு வழியும் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு உகந்ததாய் உள்ளது. வளி நீர், நிலத்தை அசுத்தப்படுத்தும் கழிவுப் பொருட்களை வெளியேற்றும் தொழிற்சாலைகளை மக்கள் செறிவாக வசிக்கும் பகுதிகளைத் தவிர்த்து மற்ற இடங்களில் அமைப்பதே அவ்வழியாகும். இதன் மூலம் அபாயமான கழிவுப் பொருட்களால் ஏற்படும் உடனடி விளைவுகள் பலவற்றை கட்டுப்படுத்தலாம் எனத் தெரியவந்துள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட இரு வழிகளும் சூழல் பாதுகாப்பிற்கு உதவி புரிபவையெனினும் அவை நிரந்தரத்தீர்வுகளல்ல. விஞ்ஞானத்தினாலும் தொழில் நுட்பத்தினாலும் ஏற்பட்ட இப்பிரச்சனைக்கு விஞ்ஞானமும் மாற்று தொழில் நுட்ப முறைகளுமே உதவி புரிய வேண்டும். விஞ்ஞானமெனக் குறிப்பிடும்போது ஆராய்ச்சி பரிசோதனைகளின் துணைகொண்டு வெளியேற்றப்படும் அதே கழிவுப் பொருட்களை வேறு உபயோகமான பொருட்களாகவோ அல்லது அவற்றை ஆபத்தற்றவையாகவோ மாற்ற முடியும். மாற்றுத் தொழில் நுட்ப முறைகளெனக் கூறும்போது குறிப்பிட்ட உற்பத்திப் பொருளின் உற்பத்திச் செய்முறைகளை மாற்றி வேறு வகையான ஆபத்தில்லாத கழிவுப் பொருட்களை வெளியேற்றப்பண்ணலாம். இவ்வாறு உருவாக்கப்படும் அதிக ஆபத்தில்லாத பாவிக்கப்படமுடியாத கழிவுப் பொருட்கள் நிலத்தின் அடியில் பாதுகாப்பான முறைகளில புதைக்கப்படுகின்றன. இப்பொருட்கள் மண்ணை அல்லது நில நீரைப் பாதிக்காத வண்ணம் தடிப்பான பிளாஸ்ரிக் உறைகளின் உள்ளேயே வைத்துப் புதைக்கப்படுகின்றன. இந்நிலங்கள் மக்கள் நிரந்தரமாக வசிப்பதற்குப் பொருத்தமற்றதாகவிருப்பதால் இவற்றில் பூங்கா போன்றவற்றை உருவாக்கலாம். சிறிய காய்கறித் தாவரங்களும் இந்நிலங்களில் வளர்க்கப்படலாம்.

மேற்குறிப்பிடப்பட்டவையாவும் ஆரம்பத்தில் சொல்லப்பட்டதுபோல கைத்தொழில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் கையா

ளப்படும் சூழல் பாதுகாப்பிற்கான செயல் முறைகளாகும். நம் நாட்டில் சூழல் மாசடைதல் குறிப்பிடத்தக்களவு அபாயகரமான தாகவில்லை. எனினும் நாம் இப்போது முதல் நம்மைத் தயார் படுத்திக் கொள்வதன் மூலம் பல பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளமுடியும். விஞ்ஞானத்தினதும், தொழில் நுட்பத்தினதும் உதவியை நாடுவதற்கு முன் பொது மக்களுக்குச் சில அடிப்படை அறிவுறுத்தல்களைப் போதிக்க வேண்டும். இவ்விடயத்திலேயே முன் குறிப்பிடப்பட்ட ஸ்தாபனங்களின் பணி இலங்கை போன்ற நாட்டிற்கு முக்கியமானது.

கிராமிய மட்டங்களில் நீர் சூழல் மாசடைவதற்கு ஒருகாரணி யாகின்றது. பொதுமக்கள் பாவிக்கும் நீரின் சுத்தக் குறைவினா லும் சழிவு நீருக்கு வேண்டிய வடிகாலமைப்பு வசதிகள் இல்லாமை யாலும் அசுத்த நீர் பல இடங்களில் தேங்கி நின்று பல தொற்று நோய்கள் நீரினால்பரவ ஏதுவாகின்றது. ஒழுங்கான மலசலகூட வசதியின்மையும் பல நோய்களைப் பரப்புகிறது. ஆகவே இப்படி யான சிறிய விடயங்களில் மேற்குறிப்பிடப்பட்ட ஸ்தாபனங்கள் சரியான வசதிகளை அமைத்தும் அவற்றை எப்படிப் பேணுவது என்பதைப் பற்றியும் மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும்.

முன்பு குறிப்பிட்டதுபோல ஒரு மனிதன் கவலையீனத்தால் அல்லது பிழையினால் அம்மனிதன் உடனடியாக நேரடி பாதிப் பிற்கு உட்படுத்தப்படுவதில்லை. ஆனால் எல்லாப் பொதுமக்களும் இதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்ற எண்ணத்தைக் கருத்திற் கொண்டால் மனிதனின் இவ்வகையான செயல்கள் தவிர்க்கப்பட முடியும். இந்த எண்ணக்கருவே மக்கள் மனதில் போதிக்கப்பட வேண்டும். நாமெல்லோரும் தனித்தனியாகச் செய்யும் பிழைகளால் நாங்கள் ஒவ்வொருவரும் பாதிக்கப்படுகிறோம். எனவே நாம் கவ னமாகப் பொது நலங் கருதி செயற்பட வேண்டும். சூழலை மாசு றாமல் காப்பதற்கு இதுவே முதற்படியாகும்.

- செ. ஜோ. புவிநாயகம்

● ''செய்துவிட முடியும்; இது அற்ப விஷயம்; சுலபமாக முடித்து விடலாம்; அதற்குக் கவனம் செலுத்தத் தேவை யில்லை;'' இவ்விதம் சிலர் தங்கள் காரியங்களை நினைத்து விடுகிறார்கள். ஆகவே கவனக் குறைவால் அவர்கள் முழுவிப் பரிதாபமான கஷ்டத்தையடைகிறார் கள். ஆபத்து ஏற்பட்டால் துக்கம் சுலமாக வந்துவிடும்.

# 'ஆசைகொண்ட நெஞ்சிரண்டு...'

**சிறுகதை**

**அரவிந்தன்:-**

"ஏன் எல்லோரும் அழுகின்றீர்கள் ...? நான் என்ன செத்தா போய்விட்டன்! இனி நீங்கள் அழக்கூடாது நீங்கள் அழுதால் - 'நான்......'"


நான் அப்படிச் சொல்லிருக்கப்படாதுதான் ஆனாலும் என்னால் பாவிக்கக்கூடிய கடைசி ஆயுதம் அதைத்தவிரவேறொன்றும் இருந்ததாக எனக்குப்படவில்லை.

இறந்துவிட்ட ஒரு உடலிற்காக, 'பிணந்தின்னிக் கழுகுகள்' போல சுற்றிச்சூழ நின்று ஒப்பாரி வைப்பதால் இழந்து விட்ட ஒன்றை மீண்டும் பெறமுடியும் என்பதில் அசாத்திய நம்பிக்கையுடைய வேடிக்கை மனிதர்கள் போல ... அவர்கள்.

தம்பி ஒரு கையை அழுத்திப் பிடித்திருக்கின்றான் மறுகையைத் தங்கச்சி. அக்கா பக்கத்தில் நிற்கின்றாவாம். அண்ணா வரவில்லையாம். அம்மாதான் சொல்கின்றா.

கங்கைகள் மலைகளிலிருந்து தான் ஊற்றுக்கொள்ள வேண்டும் என்றுஒன்றும் நியதியில்லை. கண்களிலிருந்தும் உதயமாகுமென்பதை அயமா அறியமாட்டாளா?

அண்ணி நாளைக்கு என்னுடன், கூட நிற்பதற்கு வருவாவாம். இதையும அம்மாதான் சொல்கின்றா.



வரட்டுமே! வந்து பார்த்து விட்டுத்தான் போகட்டுமே!! அண்ணனுக்கு மனைவியானதால் மட்டும், என்னை விட ஒன்றிரண்டு வயது குறைந்த அவள் அண்ணியாகிவிட முடியுமா ..... என்ன...

போவோர் வருவோர் எல்லாம் என்னைப் பார்த்து ஏதோ கிசுகிசுக்கின்றார்கள். அவர்களின் அக்கினித்துளி வார்த்தைகள் நாளடைவில் என் மன ஓட்டத்தையும் மழுங்கடிக்கச் செய்து விடும் என்று நான் நினைக்கின்றேன்.

"தம்பி விளக்கை அணைத்து விட்டுப் படுக்கட்டுமா?"—அம்மா.

எல்லோரும் வீட்டை போய் விட்டார்கள். அம்மா மாத்திரம் இப்போது எனக்குத்துணை

'விளக்கை அணைத்து விட்டுப் படுக்கட்டுமா..... ...?—மீண்டும் அம்மா.

எனக்குச் சிரிப்பு வந்து விட்டது. விளக்கை அணைப்பதனாலோ அல்லது ஏற்றுவதனாலோ என்னில் என்ன மாறுதலைச் செய்துவிட முடியும்? நான் பதில் அளிக்கவில்லை. 'க்ளிக்'. என்றொரு சதம். விளக்கு அணைக்கப்பட்டிருக்க வேண்டும்

உறக்கம் வரவில்லை. துன்பக் கேணியில் அழுந்துபவர்களிற்கெல்லாம் உறக்கமேது........ விழிப்பேது.

என் நினைவுகள் பின்னடிக் கட்டுகின்றன. நினைவே ஒரு சுகந்தான். அந்த சுகந்தரும் தூக்கத்தில் நான் லயித்துப் போகின்றேன்.

அனுஷா:-

இளமைக் காலத்தில் இருந்தே அவரை எனக்கு நன்றாகத் தெரியும். பக்கத்துவீட்டுக்காரியவர் என்பதனால் மட்டுமன்று ஓரளவு தூரத்து உறவினருந்தான். நிர்வாண உலகத்திலிருந்து விடுபட்டு, பள்ளிக்கு முன்பின்னாகப் போனதும், மாலைநேரங்களில் ஊஞ்சலாடி உளம் மகிழ்ந்ததும், இடையிடையே போட்டி போட்டுக் கொண்டு 'டா . டீ......,' சொன்னதும் மறக்க முடியாதவை. ஆனால் இயற்கையின் நிகழ்வுகள் இப்படிப்பட்ட சந்தோஷ சாம்ராஜ்யத்தையே கலைத்துவிடக் கூடியவை என்பதை அப்போது நான் உணரவில்லை

நாங்கள் எல்லாம் குழந்தைகளாகவே இருந்திருக்கப்படாதா.........?

குழந்தைப் பருவத்தைக் கடந்து— ஆளாகியபின் அதன்

கே. எஸ். சுதாகர்

காரணத்தினால் அவற்றை அடியோடு விட்டுவிட்டேன். எப்போதாவது தேவை கருதிக் கதைத்தது உண்டு

அதன் பிறகு ஆறு வருடங்கள் கழித்து அவருக்குப் பக்கத்தில் எதிரும் புதிருமாக அமர்ந்திருக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்துவிட்டார்கள் என் பெற்றோர்கள். அதன் நிமித்தம் அவருக்கு முன்னால் நாலைந்து மாதமாக நாணிக்கோணி அமர்ந்திருக்கின்றேன்.

தரப்பட்ட கணக்கு அப்படியே கடதாசியில் கண்மூடிக்கிடக்கின்றது; பேனா அசைய மறுத்து அப்படியே நிலைகுத்தி நிற்கின்றது. நிமிர்ந்து பார்த்தேன். அவர்— இமைகள் இமைக்காமல்— என்னையே பார்த்தபடி இருந்தார்.

''அனுஷா!''

''ம்ஹீம்......என்ன?''

''நான் ஒன்று சொல்லட்டுமா?''

''... ... ... ''

''உன் கண்கள் ......எவ்வளவு அழகானவை!''

நான் ஒன்றும் சொல்ல வில்லை அவர் என்ன நினைத் தாரோ எனக்குத் தெரியவில்லை அதன் பின்பு ஏதோவெல்லாம் சொல்லித் தந்தார். என் மூளை யில் அவை கிஞ்சித்தும் ஏற வில்லை.

உண்மையிலே அவை அழகு படைத்தவைதான். நான் பிறந்த போது எனக்கு 'நீள்விழி' என பெயர் வைக்க விரும்பியதாக ஆச்சி அடிக்கடி சொல்லுவார். அதற்கு காரணம் இல்லாமல் இல்லைத்தான்

..... பால் போன்ற முகம். சிரிக்கும் போது வலது கன் னத்தில் சுழித்து மறையும் சிறு குழி உதடுகளிற்குமேல் இப்போது தான் அங்கொன்றுமிங்கொன்று மாக துளிர்விடும் சிறுகிறுக்குகள் அவரும் அழகுதான் .... நன்றி கள் பிரமனுக்குத்தான்.

பிறகும் ஒருநாள், அதே செல்லமாக 'அனு' என்றார் அனுஷா வை 'அனு' வாக்கிய பெருமை ஆச்சிக்குரியது. மாணம் ... துக்கம்...... இதெல் லாம ஆச்சிக்குப் பிடிக்காது. அதனால் 'சா'வை விட்டு 'அனு' என்று கூப்பிடத் தொடங்கி விட்டா.அதைப்பார்த்து அவரும் 'அனு' என்றார் எனக்குப் புரிந் துவிட்டது' அடுத்துஅவர் என்ன சொல்லப்போகின்றார் என்று.

''ம்ஹீம்... என்ன?''

''ஒன்று சொல்லட்டுமா?''

''............''

' நான் நாளைக்குக்கொழும் பிற்குப் போகின்றேன்.. எனக்கு வேலை கிடைத்துள்ளது..,

அண்டசராசரங்கள் எல்லாம் இடிந்து. கவிழ்ந்து என் தலை மேல் வீழ்ந்தது போன்றிருந்தது எனக்கு.

அவர் கைகளை நீட்டினார். இருட்டுத் துன்பங்கள் என்னை முற்றுகையிட கைகளைப் பற்றி யபடியே சிணுங்கினேன், ஒரு முறையாவது என்னை அழவைத் துப்பார்க்க விருப்புவதாக முன்பெல்லாம் செல்லுவார். என் ஜனிக்கும் நீர்த்தேக்கத்திலி ருந்து, அதை அவர் அப்போது பெற்றுக்கொண்டார்.

அந்தக்கண்கள்...... அதற் குள் அடங்கும் காவியம் .........ஆராய்ச்சி தொடங்கியது.

ஆச்சியின கண்கள்-புனை குழிக்கண்கள். அம்மாவினுடை யது- கோழிமுட்டைக்குரியவை. அப்பாவினுடையது- கல்லறைக் கே போயவிட்டவை. அவனின் கண்கள்...... நீச்சல் தடாகத் தில் நீச்சலடிக்கும் மீன்கள்...... உள்ளத்தின் கதவுகள் திறந்திட கண்ணும், கண்ணும் கதைபேசி யதும்- இசைபாடியதும்-பார்வை கள் சாமரம்வீசி நினைவுகளிற்கு ரகசியக்கட்டளை இட்டதும் அதன் பின்னர்தான்.

மூக்கின் நுனியிலும், உதட் டோரங்களிலும் துளிர்த்திருக்கும் அருப்பு வியர்வைத் துளிகளி னான அவன் முகத்தைப் பார்த்து

நாளாகிவிட்டன. கடைசியாக நான் புகையிரதத்தில் வரும் போது கூட, அவள் கைகளையும் அதிலே தொங்கும் வளையல் களையும் தான் கண்டுகொண் டேன மரமொன்றிற்குப் பின் னால் ஒளித்திருந்து, கையசை த்து விடைகொடுத்தாள் எனக்கு.

காலிமுகக் கடற்கரையைக் கடக்குந்தோறும் ஆழப்பதிந்த அவள் நினைவுகள் எழும் வெண் மணற்பரப்பிலே நானும் அவளு மாக கைகோர்த்தபடி மிதந்து கொண்டு செல்வதாக மனம் நினைக்கும். வேலைக்குச் சென்று விட்டால மனம் ஒருநிலையில இருக்காது. நானும அவளுமாக சேர்ந்து செய்துகொண்ட சின்ன தவறுகளை நினைத்து... ... அவளைக்கேளாமலே அவளின் சட்டைக்குள்ளிருந்து காசை நான் எடுததுக்கொண்டதும், என்னை க்கேளாமலே என்கண்களை அவள் பொத்தியதும் தவறு களா......... !

இடையே 'ஓணான்' என்ற பெயரில் ஒரு கடிதமும், 'பல்லி' என்ற பெயரில் அவளின் மறு பதிற்கடிதமும் பரிமாறிக்கொண் டோம் பிறந்தநாள் வாழ்த்து ஒன்றும் அனுப்பியதுண்டு

வேலைக்குச் செல்வதும், 'புறாக்கூட்டு' வீட்டிற்குள் வாழ் ந்துகொள்வதுமான வட்டத்தின வழியே திரும்பத்திரும்ப செல் வது, போவதுமான ஒரினப்பட்ட வாழ்க்கை.

எப்போதாவது விடுமுறை நாட்களில் வீடு சென்றாலும், அவளைக்காண்பது அரிதாகி விட்டது. வெறும்பாவாடை யுடன் திரிந்த அவள், தாவணி க்குள் புகுந்துகொண்டதும்...... அவளைக் காண்பது அரிதாகி விட்டது.

அவளிடம் எவ்வளவோ பேச வேண்டுமென்றுவிரும்பினேன் முடி யவில்லை. அப்படித்தான் கண் டாலும் அவள் இதழ்கள் பிரிவ தில்லை— ஒரு சிரிப்பு— பின் நாணம்— பயபீதியினால் சுழிப்பு —அவ்வளவுந்தான்.

## ஒளியே நீ ஒடிவா!

அடிவானம் சிவந்து -வையம்
விடிவில் சங்கமிக்கும்
காலையினைக் கண்டவுடன் -
- அவள்
வேலையொன்று தேடி
சேற்று நெல்வயலில -
— மாலைவரை
சிற்றுண்டி சிறிதுமின்றி
குடல் செத்துக் கருகிட
உடல் செததுப்பிழைத்திடும்
தாய்மை உள்ளங்கள் - நிதம்
இரவும் நோக்காது
இருளில் கலந்து — தம்
இருண்ட வயிற்றுக்குக்
கரைந்த சோறூற்றும் -
- கறுப்பு
வாழ்வைக் களைத்திட
ஒளியே நீ ஓடிவா.

- கிருஷ்ணகுமார். -
குப்பிளான்.

வருடமிரு முறை வந்து போக அஃறிணைகளிற்கிடையே இருந்த கடிதப்போக்குவரத்தும் தடைபட்டுக் கொண்டது ஒரு முறை வீடுசென்று தனிமையில் சந்தித்தபோது— குதிரைக் குஞ்சத்தை இரட்டைப் பின்னலாக் குப் படியும் மூன்றாம்பிறை நெற்றிக்கு ஒரு பொட்டுவைக்கும் படியும் கூறினேன்.

அதைமாத்திரம் இப்பொழுதும் நாள்தவறாமல் செய்து வருவதாக நண்பன் ஒருவன் மூலமாக அறிந்து கொண்டேன்.

நானிருக்கும் புறாக்கூட்டு வீட்டிற்கு வாசல் என்ற ஒன்றும் அந்த வாசலினூடே வரும் காற்று திக்குமுக்காடாமல் வெளியே போவதற்கு ஒரு ஜன்னலும் இருக்கின்றன. சாளரத்தைத் திறந்துவிட வானம் தெரிகிறது. வெள்ளிநிலா விளக்காகிறது. தொடுவானத்தில் ஒரு நட்சத்திரம் சிமிட்டுகின்றது.

..........அது..........

உறங்கப்போகும் நேரத்தில் தான் அந்தக்கடிதத்தை வீட்டுக்காரர் தந்தார். அம்மா தான் போட்டிருந்தா. அதில் அண்ணைக்குத் திருமணம் நிச்சயதார்த்தம் செய்யப்பட்டுவிட்டதெனவும் புறப்பட்டு வரும்படியும் இருந்தது

அண்ணைக்கும் கலியாணம் —அதுமுடிய அக்காவிற்கு— அதன் பிற்பாடு .........உறக்கம் வரமறுத்தது.என் மனம் சிறகடித்துப்பறந்து ஊர் ஞாபகத்தை உண்டுபண்ணியது. அவன் ‘க்ளோஸ் அப்’ இல் வந்து போனான். நரம்புகள் ஆரோகணம் அவரோகணத்தில்......... குங்குமமாகச் சிவந்த உதடுகட்கும், விருந்துண்ண அழைக்கும் பௌர்ணமிக் கண்களிற்கும் ஈர ஒத்தடம் கொடுக்க உதடுகள் விழைகின்றன எப்போதோ நடக்கப்போகின்ற ஒன்றிற்காக மனம் ஒத்திகைக் கனவுகள் பார்த்தன.

அனுஷா :-

நாளொன்றின் உதயத்திற்காக இரவின் துகிலுரிப்படலம் நடந்துமுடிந்திருந்தது முற்றத்தில் நின்று குப்பைகூளங்களை கூட்டிக்கொண்டிருந்தேன். தினேஷ் தன் துவிச்சக்கரவண்டியை அவசரமாகத் தள்ளிக் கொண்டு வாசல்வரைசென்று திரும்பி என்னைப் பார்த்து ஒரு அசட்டுச்சிரிப்பை உதிர்த்துவிட்டு தாவி ஏறி மிதிக்கத் தொடங்கினான். அவனது அந்தப் பார்வையும், கபடமற்ற சிரிப்பும் எனக்கு அவன் அண்ணன் அரவிந்தனை நினைவூட்டியது.

ஒரு பெண்ணுடைய கஷ்டங்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றால், பெண்ணாகப் பிறந்து பார்த்தால்தான் தெரியும்.

எங்காவது தனிமையில் இருந்து ஓவென்று அழவேண்டும் போல் இருக்கின்றது.

அவர்கள் வீட்டின் அலரிமரங்களிலும் மாமரங்களிலுமாக மின்குமிழ்களை இணைத்து எரியவிட்டுக்கொண்டிருந்தார்கள் சிலர். அவர்களில் ஒருவன் பலத்த குரலில் ''உங்கள் வீட்டிற்கும் வருவோம்!'' என்றான்.

''அக்காவிற்கு தலைமயிர் பின்னிவிடப்போகின்றேன்......''

என்றபடியே தங்கை பாவாடையைப் பிடித்து இழுத்துக்கொண்டிருந்தாள். தொடர்ந்துவந்த விசிலடிச்சத்தத்தைக் கேட்காதவாறு தப்பிக் கொண்டே வீட்டிற்குள் புகுந்து கொண்டேன், சற்று நேரத்தில்—

வெளியே எழுந்த சத்தத்தைக் கேட்டு சாளரத்திற்குள்ளால் எட்டிப்பார்த்தேன். மின்சாரக்கம்பி ஒன்று அறுந்து அந்தரத்திலே தொங்கிக் கொண்டிருந்தது. முற்றத்திலே பயங்கரம் போட்டு விழுந்துகிடந்தார் அரவிந்தன் உடனே அங்கு செல்வதற்காகப்புறப்பட்டேன் ஆனால் அம்மாதான் திருமணத்திற்கு முன்பு அங்கு போகவேண்டாமென்று சொல்லித் தடுத்து விட்டா. ஆனால் மனம் நோக்கில்லாமல் அலைந்து மௌனப புலம்பல்செய்துகொண்டிருந்தது

சுற்றி நின்றவர்களை விலத்தியபடியே ஒருவர் உள்ளே சென்று நீர் தெளிப்பதும், அரவிந்தன் எழுந்து கொள்வதும் தெரிகின்றது. முகமெல்லாம் கருகிப் போய்..... அரவிந்தன்.........

''அரவிந்தன் அண்ணைக்குக் கண்தெரியவில்லை!'' என்று அழுதபடியே தினேஷ் வந்து சொன்னபோதுதான்— அம்மா என்னையும் அழைத்துக்கொண்டு அவர்கள் வீட்டிற்குப் புறப்பட்டா. அங்கே..... ஒரே ஒப்பாரி......... அழுகை.. ......

''அம்மா.........நான் உங்க எல்லாரையுந்தான் பார்த்துவிட்டேனே....... பிறகு ஏன் அழுகின்றீர்கள்?...... அண்ணியைத்தான் பார்க்க நான் கொடுத்து வைக்கவில்லை.........!'' என்று அரவிந்தன் சொன்னபோது என் இதயமே நொறுங்குண்டது போன்றிருந்தது.

''... அம்மா..... அண்ணி யாரம்மா......? எந்த இடம்?'', என்று குழந்தை போலக் கேட்கின்றார்

''பக்கத்து வீட்டு.........
அனுஷாதான்ரா!'', என்று பார்வதிமாமி மிக இலகுவாகச் சொன்னபோது.. ? மீண்டும் அவர் மயங்கிவிழுந்து கொண்டார்.

அப்போது ஒரு சத்தம்— எனக்கு மட்டும் கேட்டது. அந்த ஒலி என் இதயத்தின துடிப்பை அடக்குமளவிற்கு வலிமை பெற்றிருந்தது. ஆமாம்—அப்போது தான் அவரது, 'விழிவானம்' வெடித்துச் சிதறியிருக்க வேண்டும்.

**மீண்டும் அரவிந்தன்:-**

அவளின் கண் — கள், எனக்கு குழப்பத்தை உண்டு பண்ணி வெறியைத் தந்தன. அந்த வெறியின் உக்கிரத்தினால் இப்போது நான் வெந்து மறுகி புழுப்போலத் துடிக்கின்றேன். என் மனவேதனைகளைக் கொட்டித்தீர்க்க இப்போது எனக்கு ஒரு வடிகால் வேண்டும். இல்லாவிடில் கானல்வெளியில் திரிந்து அந்தமானை, என்நெற்றிக் கண் (?) சுட்டெரித்துவிடும்.

''தம்பி......என் அழுகின்றாய்? இன்னுமா நீ நித்திரை கொள்ளவில்லை.''— அம்மா.

நான் அழுகின்றேன்தான். என் கண்களை இழந்ததற்காகவல்ல எனக்குரிய கண்களை இழந்து கொண்டமைக்காக.

என்கண்கள் சுடுநீரைச் சொரிகின்றன. அந்தக் கண்ணீருக்குப் பின்னால் ஏதாவது புதிய அத்தியாயம் காத்துக்கிடக்கின்றதா.........? [முற்றும்.]

# நாகரிகமும் பண்பாடும்

**கோக்கூர்கிழான்**

“நாகரிகமும் பண்பாடும் வேறு வேறாகப் பேசப்பட்ட போதும் இவையிரண்டும் பிரிக்க முடியாதவாறு ஒன்றையொன்று தழுவிப் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. உலகியல் நெறிக்கேற்ப காலத்துக்குக் காலம் இவை மாற்றமுற்றே வந்திருக்கின்றன, வருகின்றன. ஒன்றன் தோற்றமும் வளர்ச்சியும் மட்டுமன்றித் தளர்ச்சியும் வீழ்ச்சியும் கூட மற்றயதைப் பாதிக்கவே செய்திருக்கிறது, செய்கிறது.

நாகரிகம் ஒரு சமூகத்தின் புறநிலையைப் புலப்படுத்தி நிற்க பண்பாடு அச்சமூகத்தின் அகநிலையை வெளிப்படுத்தி நிற்கிறது. புறநிலையில் ஏற்படும் மாற்றங்கள் அகநிலையையும், அகநிலையில் ஏற்படும் மாற்றங்கள் புறநிலையையும் பாதிக்கவே செய்கின்றன. மாற்றமென்பது உலகியல் நெறியாதலால் அம் மாற்றத்துக்கேற்ப தம்மை மாற்றிக் கொள்ளாத நாகரிகபண்பாடுகள் அழிந்தொழிய காலத்துக்கேற்ற கோலங் கொண்டவை வாழ்ந்தும் வளர்ந்தும் வந்தன, வருகின்றன.

அறிவியல் துறைகள் அரும்பு நிலையில் இருந்த அடிநாளில் சமூகங்கள் ஒன்றுடனொன்று கலப்புறாமல் தேங்கித் தேங்கி இருந்தமையால் அச்சமூகங்களின் நாகரிகமும் பண்பாடும் தனித்தன்மையுடன் நீடுநிலைத்திருந்தன. அத்துடன் அறிவுநிலையில் மக்கள் தாழ்ந்திருந்தமையால் அவற்றினை அப்படியே பேணி வந்தனர், பேணிவருவதிற் பெருமையுமுற்றனர். காலப்போக்கில் அறிவியல் துறைகள் வளரவளர சமூகங்களின் தேக்க நிலைகள் தளரத்தளர அவற்றின் தனித்தன்மையும் மறைந்தொழிந்தன. இன்று உலகின் ஒரு கோடியில் நடப்பவை மறுகோடியில் விரைந்து பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதனால் அகப் புறநிலைகள் விரைந்து மாறி வருகின்றன. இம்மாற்றங்கட்கேற்ப இவற்றின் வெளிப்பாடுகளாய பண்பாடு நாகரிகங்களும் மாறி வருகின்றன.

ஆரிருள் கவிந்து கிடந்த துறையெலாம் அறிவியல் ஒளி முன் விளக்கமுற்று வருவதால் புதுமைகள் பல நிகழ்கின்றன. புதியன புகுதலும் பழையன கழிதலும் இயல்பு. அறிவியல் வளர்ச்சியும் அதன் விளைவான புதிய கண்டுபிடிப்புக்களும் அரும் பெரும் மாற்றங்களை உலகில் ஏற்படுத்தி வருகையில் அவற்றின் தாக்கம் எல்லாத் துறைகளிலும் ஏற்படத்தான் செய்யும். இதனை எதிர்த்துப் பழைமையைப் போற்றிக் காக்க முயல்வது பேதைமையின் பாற்படுமன்றி அறிவுடைமையாகாது. புதிய நாகரிகப் போக்கும் அதன் தாக்கத்தால் ஏற்பட்டுவரும் பழைய பண்பாட்டுச் சிதைவும் உலக அழிவினை விரைவுபடுத்தி வருகிறது என்பது மறுக்க முடியா உண்மையெனினும் அது தவிர்க்க முடியா நியதியென்பதை மனங்கொள்ள வேண்டும்.

# பொது அறிவுப் போட்டி

**நிபந்தனைகள்**

- இப்போட்டி பத்து வினாக்களைக் கொண்டதாகும் வினாக்கள் பொதுவாகப் பல்வேறு துறை சார்ந்த விடயங்களையும் உள்ளடக்கியனவாக அமையும்.

- விடைகள் யாவும் வினாக்களுக்கு அருகில் அதற்கென விடப்பட்டுள்ள இடங்களிலேயே எழுதப்படல் வேண்டும். விடைகளுடன் பிரவேசப்பத்திரமும் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். தனியான தாள்களில் அனுப்பப்படும் விடைகள் ஏற்கப்படமாட்டா.

- முற்றிலும் சரியான விடைகளை எழுதியனுப்பும் முதல் மூவருக்கும் முறையே 50/-, 30/-, 20/- பரிசிலாகவழங்கப்படும். சகல வினாக்களுக்கும் எவரும் சரியான விடைகளை அனுப்பாதவிடத்து மிகக்கூடிய சரியான விடைகளை எழுதி அனுப்புபவர்களுக்கு முதற்பரிசில் வழங்கப்படும்.

- ஒன்றிற்கு மேற்பட்டோர் சரியான விடைகளை அனுப்பும் நிலையில் பரிசிலுக்குரியவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்

- நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதாகும்.

- போட்டிக்கான விடைகள் ஒவ்வொரு மாதமும் 30-ந் திகதிக்கு முன்னர் ஆசிரியர் குழு, 'உள்ளம்' 'வளர்மதி சனசமூக நிலையம்', சம்பியன் லேன், கொக்குவில் எனும் முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

**வினாக்கள்**

1. 'டார்ஜான்' என்ற கதாபாத்திரத்தை தனது நூல்களில் அறிமுகப்படுத்தி உலகப்புகழ் பெறச் செய்தவர் யார்?
................. .........................

2. சோவியத் ரஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான 'பிராவ்தா' பற்றி அறிந்திருப்பீர்கள். 'பிராவ்தா' என்பதன் பொருள் என்ன?....................................

3. உலகப் புகழ் பெற்ற நோபல்பரிசில் எந்த ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றது?....................................

4. உலகின் ஏழு புராதன அதிசயங்களில் இன்றும் சிதை வுறாது இருப்பது எது?..........................................

5. இலங்கையில் முதலில் தோன்றிய தமிழ் நூல் எது?

..............................................................

6. டெஸ்ட் கிரிக்கட் போட்டிகளில் மிகக் குறைந்த வயதில் ஆடி உலக சாதனையை ஏற்படுத்தியவர் யார்?

..............................................................

7. அவுஸ்திரேலியப் பழங்குடிகளால் பயன்படுத்தப்படும் வீசியெறிந்தால் மறுபடியும் வீசியெறிந்த இடத்திற்கே வரும் ஆயுதத்தின் பெயர் என்ன? ... ...... ..............

8. உலகப்புகழ் பெற்ற 'மோனாலிசா' ஓவியத்தை வரைந் தவர் யார்?..............................................

9. இலங்கையின் தேசியக் கொடிபோன்று வாளேந்திய சிங்க முள்ள தேசியக் கொடியைக் கொண்ட வேறொரு நாடு எது?..............................................

10. உலகின் முதல் தபால் தலை எந்த ஆண்டில் வெளியிடப் பட்டது?.............................................. .. ......

## பிரவேசப் பத்திரம்

முழுப்பெயர்..............................................................

முகவரி:..............................................................

..............................................................

மாணவரான் பாடசாலை: ............ . ..............

கையொப்பம்:.......................... ........................

திகதி:.......................... ...

# வாழ்வு எமக்கு விடியுமோ?

(சிலேடை வெண்பா)

அம்மா மமியாக அப்பா தடியானார்
எம்மினிய மாமியும் ஆண்டியானார் - அம்மா
வுடன்பிறந்த பெண்டிரும் ஆண்டியானார் வாழ்வு
விடியுமோ எமக்கு விளம்பு.

(மமி - MUMMY - பிணம், தடி - சுள்ளி, ஆண்டி - இரந்துண்பவர்)

அம்மா இறந்ததும் அத்துயர் தாங்க முடியாத அப்பா காய்ந்து மெலிந்து சுள்ளிபோல் ஆகிவிட்டார். எம்முடனேயே நெடுங்காலம் இருந்த மாமியும் அம்மாவின் அக்கா தங்கையரும் வேறு துணையின்மையால் இரந்துண்ணும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். இப்பொழுது எம் வாழ்வு எமக்கு இருண்டுவிட்டது. விடியுமோ வாழ்வு? சொல்லு

(மமி - MUMMY - தாய், தடி - டடி - DADDY, ஆண்டி - AUNTY)

அம்மா, அப்பா, மாமி, பெரியம்மா, சின்னம்மா போன்ற தமிழ் வழக்குச் சொற்கள் வழக்கிழந்து போகின்றன. அவற்றிற்குப் பதிலாக முறையே மமி (MUMMY), டடி (DADDY), ஆண்டி (AUNTY) போன்ற ஆங்கிலச் சொற்கள் ஆளப்படுகின்றன. இப்போக்கு நீடித்தால் காலப்போக்கில் தமிழ் வழக்குச் சொற்கள் படிப்படியாக தமிழிலிருந்து அடியோடு மறைந்து போகும். அவ்விடங்களை ஆங்கிலச் சொற்கள் நிரப்பிவிடும். இந்நிலை ஏற்பட்டால் தமிழ் அழிந்துவிடும் தமிழர் வாழ்வும் இருண்டுவிடும். பின்னர் வாழ்வெமக்கு ஏது? எனவே தமிழைப் புறக்கணிக்காமல் அதனை அரவணைத்துக் காக்கவும் வளர்க்கவும் முதலில் பிறமொழிச்சொற்கள் தமிழில் கலப்பதைத் தவிர்க்கவும், தமிழ்மொழியின் தூய்மையையும் தனித்துவங்களையும் தலைமையையும் பேணிக்காக்க வேண்டுவது தமிழரின் பெருங்கடனன்றோ. தமிழரே தமிழைப் புறக்கணித்தால் வேறெவர் அதனைக்காப்பார்?

- குறும்பனை நாடன்.

# மனிதன் மறந்துவிட்டால்...!

- புத்தொளி -

மறதிக்கு இருக்கும் மகா சக்தி ஞாலத்திலும் மாணப்பெரியது அப்பலோ சக்தியிலும் பன்மடங்கானது இந்த மறதி டொக்டரை, எஞ்ஜினியரைக்கூட ஒரு கை பார்த்துவிடுகிறது.

ஒப்பரேஷன்செய்யும் டொக்டர் மறதியாக கத்தரிக்கோலை உள்ளே வைத்துத் தைத்துவிட்டாரானால் நோயாளி ஏமாளியாகி எமலோகமும், டொக்டர் சிறைச்சாலைக்கும் நேரே போக வேண்டியதுதான்.

அமரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்காக வேட்புமனு தாக்கல் செய்ய வந்த இருவரில் ஒருவர் தமது வேட்புமனுவில் கையெழுத்திட மறந்துவிட்டால் ஒருவர் முகத்தில் அசடும் அடுத்தவர் முகத்தில் ஆனந்தமும் ஏற்படும். விண்வெளி விஞ்ஞானிகள் விண்கலத்தைக் குறிப்பிட்ட நேரப்படி குறிப்பிட்டவாறு இயக்கவில்லையானால் பயணத்தில் பலகோடி நஷ்டம் ஏற்படுவதுடன் பயணிகள் உயிரும் இந்த மறதிக்குப் பண்டமாற்றாகிவிடும்.

ஏகதடபுடல் திருமணத்தன்று புணமகள் மணவறையில் காத்திருக்க தாலிகட்டும் நாளை மறந்த வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு மிஞ்சுவது ஏமாற்றம். மணமகளுக்கோ அவமானம். சில வேளை மணவீடு பிணவீடாகியும் விடும்.

மழை கொட்டும்போது தோளில் தொங்கும் குடையை மறந்த தோழர் அறநனைந்து கொண்டு நடந்தால் பார்வையாளர்கள் சிரியாய்ச் சிரியெனச் சிரிப்பார்கள். விழுந்து விழுந்து சிரிப்பார்கள்.

அடுப்பில் பாலைக் காய்ச்சிக் கொண்டு அயல்வீட்டு அமுதாவுடன் அரட்டை அடித்தால் எஞ்சுவது பால் அல்ல. பால் சட்டிதான்.

சினிமாவுக்கு ரெடியாயிரு சம்பளமெடுத்து வருகிறேன் என்ற கணவன் குடித்துக் கும்மாளமடித்து வீட்டுக்கு வந்தால் இம்மறதியின் பரிசு இரண்டு சொட்டுக் கண்ணீர்; பசியும் பட்டினியும்.

இரவு கள்ளத்தனமாகச் சந்திக்கச் சென்ற காதலன் நீண்ட நேரம் பேசியபின் அயர்ந்து தூங்கிவிட்டால் விஷயம் அம்பலத்திற்கு வந்துவிடும். ஊரின் தூற்றலுக்கும் ஆளாகவேண்டியேற்பட்டுவிடும்.

காசுக்காக வந்த கள்வன் அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு ஆயாசமாகத் தூங்கி விட்டானானால் மிஞ்சுவது அடியும் உதையும் சிறைவாசமுமே யாகும்.

நகைக்கடை வியாபாரி கதவைப் பூட்ட மறந்துவிட்டால் அடுத்த நாட் காலை அவருக்கு மிஞ்சுவது அதிர்ச்சியும் தாளமுடியாத துக்கமுமேயாகும்

நேர்முகப்பரீட்சைக்குச் செல்பவன், வேண்டிய பத்திரங்களைக் கொண்டு செல்ல மறந்துவிட்டால் முடிவு ஏமாற்றமே

சினிமா பார்த்துக் கொண்டிருப்பவன 'கிளைமாக்'சின்போது மறதியாக வீட்டிலிருப்பதாக எண்ணி பக்கத்திலிருக்கும் பருவ மங்கையை முத்தமிட்டால் கிடைப்பது கன்னத்தில் பளார் பளார் அர்ச்சனையே.

தன் காதலிக்கு எழுதியகடிதத்தை மறதியாகத் தந்தைக்கு அனுப்பிவிட்டால் ஏற்படுவது பதற்றமே.

அடுத்தவர் பேனாவை ஒருவர் இரவல் வாங்கிவிட்டுப் பின்னர் எழுதி முடித்ததும் மறதியாகத் தன் பையிலேயே வைத்துக் கொண்டு ராஜநடை நடந்தால், உடையவரின் கண்டனத்துக்கு ஆளாகி அவமானமும் படவேண்டியேற்படும்.

சாப்பிட்ட கோப்பையைக் கழுவி முடிந்ததும் குசினிக்குக் கொண்டு செல்வதற்குப் பதில் மறதியாக படுக்கை அறைக்கு எடுத்துச் செல்லும் அப்பாவைப் பார்த்து பிள்ளைகள் ஓஓயெனச் சிரிப்பார்கள்.

பரீட்சைக்குரியவிண்ணப்பத்தாளை நிரப்பி குறிப்பிட்ட திகதிக்கு முன் அனுப்ப மறந்துவிட்டால்ஒரு வருடப்படிப்பு வீணாகிவிடும், முத்திரைப் பணமும் தண்டச் செலவாகிவிடும்,

கரும்பலகையில் எழுதுவதைப் பார்த்து எழுதுங்கள் என மாணவர்களிடம் சொல்லிய ஆசிரியர் சோக்குக்குப் பதில் பென்சிலை எடுத்து எழுதத் தொடங்கினால் வகுப்பில் ஏற்படுவது பிரளயந்தான்

நடன ஆசிரியர் மேடையில் வந்து பேசுவதற்கு ஆயத்தமாகி மறதியாக 'திமிக்கிட திமிக்கிட வாதய மிருதங்கம்' என்று பேச்சை ஆரம்பித்தால் கூட்டத்தினரிடையே ஏற்படுவது ஏளன 'அப்ளாஸ்' தான்.

இரவலாகச் சயிக்கிள் வாங்கிய ஒருவர் சென்ற இடத்திலேயே சயிக்கிளை விட்டுவிட்டு நடையாக நடந்து வீடு வந்துவிட்டால் ஏற்படுவது அதிர்ச்சி

கோட்டிலிருந்து வந்த அழைப்பாணையை ஏற்ற பின்னர் குறிப்பிட்ட திகதிக்குக் கோட்டுக்குச் செல்லாமல் மறந்துவிட்டால ஏற்படுவது சிறைவாசம்; பிணை போன்றவையே.

இக் கட்டுரையைப் படிப்பதற்கு வாசகர் மறந்துவிட்டால்

நீங்களும் மறதிப் பேர்வழி வரிசையில் ஒருவராகிவிடுவீர்கள.

இக் கட்டுரையை எழுதி 'போஸ்ட்' செய்ய நான் மறக்காமல் இருக்க வேண்டுமே.

# திரைப்படமும் தேசிய அபிவிருத்தியும்

ஒரு நாட்டின் பொழுது போக்குச் சாதனமாக மட்டுமன்றி தேசிய கலாசாரத்தின் தனித் தன்மைகளைப் பேணுவதற்கு உதவுவதாகவும் திரைப்படம் வளர்ச்சி பெற்றுள்ளது. அது மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்து மிகப்பெரிய கைத் தொழிலாயும் வளர்ச்சி பெற்றுள்ளது. திரைப்படச்சுருள் (FILM) உற்பத்தி, சருவிகளின், உற்பத்தி விளம்பர சாதனங்களின் உற்பத்தி போன்றவற்றிற்கும் அவை சார்ந்த தொழில் வாய்ப்புக்களுக்கும் உதவுகிறது. படமாளிகைகளிலும் அதிகளவு தொழில் வாய்ப்பை வழங்குகின்றது. அரசாங்கம் குறிப்பிடத்தக்களவு வரி விதிப்பதால் வருமானம் பெறவும் திரைப்படத்துறை உதவுகிறது.

இலங்கைபோன்ற சிறிய வளர்முக நாடொன்றில் 'கலைப் படம்' (ART FILM) சிலவற்றைத் தயாரிக்கும் ஆற்றல் வளர்ந்தே உள்ளது லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், சுனீத்தா பீரிஸ் போன்றோர் இவ்வகையில் முன்னணி வகிக்கின்றனர். ஆனாலும் அபிவிருத்தியின் ஓர் அங்கமாக — ஒரு கைத்தொழிலாக — வளரவில்லை. அவ்வாறு வளர முடியாமைக்கு இத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் காரணமாகும். அவற்றுள் முதன்மையானவை:-

(1) போதியளவு நிதியும் வசதிகளும் இல்லாமை

(2) தகுதியுடைய, போதியளவு பயிற்சியுள்ள ஆளணி இல்லாமை

(3) வெளிநாடுகளின் தொலைக் காட்சி, வீடியோ, திரைப் படங்கள் என்பன அதிக ஆதிக்கம் செலுத்துதல்

இவற்றில் வெளிநாடுகள், குறிப்பாக மேற்குலக நாடுகள் தமது திரைப்படங்களை அனுப்பும்போது எமது நாட்டின் பெரும்பாலான சாதாரண மக்களுக்கேற்ற படங்களைத் தயாரித்து அனுப்புவதில்லை. தமது முன்னைய ஆற்றல்களை - குடியேற்றவாதத் திறமைகளை— வெளிப்படுத்துவனவாகத் தயாரித்து தமது முதலாளித்துவ கலாசாரத்தைப் பரப்புகின்றனர். அல்லது எம் நாட்டின மேன்மைக் குடியினரின் (Local Elites) திருப்திக்கான படங்களைத் தயாரிக்கின்றனர். எமது பண்பாட்டுக்கு முரணான பாலியல் சமூக விழுமியங்களைப் பிரதிபலிக்கும் திரைப்படங்களையே ஏற்றுமதி செய்கின்றனர். இதனால் அடிக்கடி புகைத்தல், பெண்களும் புகைத்தல், பகிரங்கமாக முத்தமிடுதல், அடிக்கடி மது அருந்துதல், ஆடம்பரமாக உடையணிதல். பொது உணவகங்களில் உண்ணுதல் போன்ற பழக்கங்கள் எம்மக்கள் மத்தியில் பரவி நியாயப் படுத்தவும் படு

கிறது. இது வறிய நாடொன்றில் சிக்கனப் பழக்கங்களை அழித்துவிடுவதாயமைகிறது.

உண்மையில் மூன்றாம் உலகின் சொந்தக்கலாசாரங்களை வளர்க்கவும், சுயமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தவும் கூடியதாக சுதந்திரமான திரைப்படங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

இலங்கையில் ஜயவர்த்தனா அரசாங்கத்தினால் 'திறந்த பொருளாதாரம்' சார்ந்த கொள்கை அறிமுகமானதைத் தொடர்ந்து திரைபபடங்களின் இறக்குமதி கூடிற்று. இவை பாலியலைத் தூண்டுதல், வன்செயல்களை தனிநபர் மட்டத்தில் நியாயப்படுத்தல் என்ற விடயங்களை விரிவுபடுத்தியுள்ளதாக ஜேர்மனியில் நிகழ்ந்த வேலைத்தளத்தில் அன்ட்ரூ ஜெயமான்ன (Andrew Jayamanne) குறிப்பிட்டிருந்தார். வெனிசு

மா. சின்னத்தம்பி

வேல நாடடிலும் அமெரிக்கத் திரைபபடங்களின் ஆதிக்கம் கூடி கலாசார மாசுபடல்' (Cultural Pollution) கூடியுள்ளது. வருடமொன்றுக்கு 12 திரைப் படங்களை அவாகளே உற்பத்திசெய்யும்போது 500 திரைப்படங்கள் அமெரிக்காவிலிருநது இறக்குமதியாகின இது வெனிசுவேலாவுக்கு அன்னியச் செலாவணி நெருக்கடியை நீண்டகாலத்தில் ஏற்படுத்தும். இந்தநிலை சிம்பாப்வே, கானா, நேபாளம் போன்ற நாடுகளுக்குமுண்டு. இந்தியாவில் சொந்தத் தயாரிப்புகளும் அதிகளவில் உள்ளன ஆனால், அவைகூட இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, செல்வத்தின் சமபங்கீடு என்பவற்றுக்கேறப வளரவில்லை. ஏழைகளின் 'கற்பனைச் சுகங்களை வழங்கும் விதத்தில் தயாரிக்கப்படும் திரைப்படங்கள், அவர்களைப் பொருளாதார ரீதியில் மேலும் ஏழைகளாக்கி விடுகின்றன. ஒரு சில நடிகர்கள் ஐந்து வருடங்களில் உழைக்கும் செல்வத்தில் நூறில் ஒரு பங்கினை ஐம்பது வருட தொழிற்சாலை உழைப்பிலும் ஒரு தொழிலாளி பெற முடியாது. சில பெரும் முதலாளிகளின் தனியுரிமையில் அத்துறை வளர்ந்துள்ளதால், புதியவர்கள் பலர் இத்தொழிலில் நுழைவதும் இத்துறை பரவலாவதும் கடினமாகியுள்ளது

இலங்கையின் தலைநகரங்களில் வீதிகளிலும் தொலைக்காட்சி தராளமாகக் காட்டப்படுகிறது. 'டினஸ்ரி' (Dynasty) போன்ற படங்கள் முதலாளித்துவ கருத்து நிலைகளையே மக்களிடம் வளர்க்கின்றன. எதிர்காலத்திலேனும் பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு திரைப்படங்களைத் தயாரிக்க வேண்டும்.

(i) சேரிவாழ் மக்களின் பிரச்சினைகள்.
(ii) தொழிலாளர் வேலை நிறுத்தங்கள்.
(iii) சிறுபான்மை மக்கள் பிரச்சினைகள்
(iv) நிலவுரிமை பற்றிய பிரச்சினைகள்.
(v) குழந்தைத் தொழிலாளர்கள்
(vi) இளம்வயதினர் விபசாரம் (Teenage Prostitution)
(vii) இளைஞர்கள் தொழிலின்மை. (Youth Unemployment).
(viii) மாணவர் சேமிப்புப்பழக்கங்கள்.

அழகியற் திரைப்படங்களை மட்டுமன்றி தேசிய பங்கில் மேற்குறித்த கருத்துக்களை மையமாகக் கொண்ட திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதே எமது அபிவிருத்தித்தேவைகளுடன் திரைப்படம் இணைய வழிவகுக்கும்.

# சொல்லாடல் [!]

## அம்மா

பண்டிதர் மகளைப் பார்த்து – அம்மாவை விரட்டி வெளியே விட்டுக் கதவை இழுத்து மூடிவிடு

மகள்: (வியப்புற்று) ஏனப்பா? அம்மாவை விரட்டிறதா! அது என்னால் முடியாதப்பா.

(சினங்கொண்ட) பண்டிதர் - என்ன சொன்னாய்! முடியாதா? இதோ அம்மாவுடன் உன்னையும் விரட்டி விடுகிறேன் பார்.

(அச்சமுற்ற) மகள் - அப்பா! உங்கள் மூளை குழம்பிவிட்டதப்பா. அம்மா . . . !

பண்டிதர் - அம்மாவின் தொல்லை ஒருபுறம்! உன்தொல்லை மறுபுறம்!!

மனைவி: இரண்டு பேருக்கும் என்ன வந்தது?

மகள்: (அழுதழுது) தாயிடம் - உங்களை விரட்டி வெளியே விட்டுக் கதவை மூடும்படி சொன்னார். நான் மறுத்ததும் உங்களுடன் என்னையும் விரட்டப் போவதாகச் சொல்லுகிறார். அதுதான்

பண்டிதர்: என்கூற்றை அவள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை அதோ! அந்த மாட்டைப்பார்! அதைத்தான் விரட்டச் சொன்னேன். அதன் தொல்லை மிகுந்துவிட்டது. விரட்டி வெளியே விட்டுக் கதவை மூடிவிடு.

மனைவி: அந்த மாட்டை விரட்டிவிடு என்று சொல்லியிருந்தால் அவளுக்கு விளங்கியிருக்கும், விரட்டியுமிருப்பாள். உங்கள் பண்டிதம் ......

(அம்மா - அந்த விலங்கு - அந்தமாடு).

- வடமுது புலவியனார்.

# கிரிக்கெட் புராணம்

பொதுவாக தோற்றவர்கள் தான் ஓட்டமெடுப்பார்கள். ஆனால் கிரிக்கெட்டிலோ ஓட்டமெடுப்பவர்கள்தாம் வெற்றி பெறுகிறார்கள் இதனால்தானோ என்னவோ கிரிக்கெட் மிகவும் ரசித்து ஆடப்படும் ஆட்டங்களில் ஒன்றாக விளங்குகிறது. குறிப்பாக தெற்காசிய நாடுகளில் மேற்சத்தைய நாடுகளைவிட கிரிக்கெட்டின் ஆதிக்கம் அதிகமாயுள்ளது. இன்று இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா, பாக்கிஸ்தான், இலங்கை, நியூஸிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் என்பனவே டெஸ்ட் அந்தஸ்தைப் பெற்றவையாக இருப்பினும் மேலும் பல நாடுகளில் கிரிக்கெட் விரும்பி ஆடப்படுகிறது. கிரிக்கெட் ஆட்டம் எப்போது ஆரம்பித்தது? எப்படி வளர்ந்தது என்பன மிகச் சுவாரஸியமான விடைகளைத் தரத்தக்க வினாக்களாகும்.

முதன்முதலில் 1550ம் ஆண்டில் இங்கிலாந்து சரேயிலுள்ள கில்போட் எனுமிடத்தில் ஒரு விளையாட்டை ஆடியிருக்கிறார்கள். இதற்கு 'கிரிக்கெட்' என்றுதான் பெயர் ஆயினும் அது இன்றைய ஆட்டத்தை ஒத்திருந்ததற்கு எவ்வித ஆதாரமுமில்லை. அங்கீகரிக்கப்பட்ட கிரிக்கெட் ஆட்டம் 1700ம் ஆண்டு மார்ச் மாதத்தில் லண்டனிலுள்ள 'க்ளரப்ஹாம்காமன்' எனுமிடத்தில் ஆடப்பட்டது. கிரிக்கெட் விதிகள் 1774ம் ஆண்டில் தான் முதன் முதலில் உருவாக்கப்பட்டன. பதிவு செய்யப்பட்ட முதலாவது கிரிக்கெட் போட்டி 1744 யூன் 18ல் கென்ற் அணிக்கும் அகில இங்கிலாந்து அணிக்கும் இடையில் பின்ஸ்பரியில் உள்ள ஆட்லரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் கென்ற் அணி ஒரு விக்கெட்டினால் வெற்றிபெற்றது. 1744ம் ஆண்டு விதிகளில் ஓவருக்கு நான்கு பந்துகள் எனக் கணக்கிடப்பட்டது. விக்கெட்டுகளுக்கிடையிலான தூரம் தற்போது உள்ளது போன்றே 22 யார் (22 Yards) ஆக இருந்தாலும் விக்கெட்டுகளின் உயரம் 22 Inch ஆக இருந்தது அத்துடன் இரு விக்கெட்டுகளே இடம்பெற்றன. 1776ம் ஆண்டில் தான் விக்கெட்டுகளின் எண்ணிக்கை மூன்றாயிற்று. ஆரம்பத்தில் ரன்களுக்கு நொட்ச் (Notch) என்று பெயர் வழங்கப்பட்டது. ஆட்டக்காரரின் ஒவ்வொரு ஓட்டமும் ஒரு மரக்கட்டையில் செதுக்கல் முறையில் குறிக்கப்பட்டது ஒவ்வொருபத்தாவது ஓட்டமும் சற்று ஆழமாகச் செதுக்கப்பட்டது. ஒரு குழுவின் மொத்த ஓட்

டங்களே கணக்கெடுக்கப்பட்டன. மிகமுக்கிய ஆட்டங்களில் மாத்திரமே தனிப்பட்டவர்களது ஓட்டங்கள் கணக்கெடுக்கப்பட்டன. ஆனால் இன்றைய நிலை முற்றிலும் வேறுபட்டதாகும். அணிகளைவிட தனிப்பட்ட ஆட்டக்காரர்கள் பல சமயங்களில் முக்கியம் பெறுவதுடன் ஆட்டக்காரர்கள் தமது சொந்த எண்ணிக்கையைஅதிகரிப்பதில் அதிக அக்கறை காட்டுகின்றனர்.

ஆரம்பத்தில் கிரிக்கெட் துடுப்புகள் (Bats) ஹொக்கித் துடுப்புகளைப் போன்று சிறிய வளைவுடனேயே இருந்தன. பின்னர் இவை படிப்படியாக மாற்றமுற்று தற்போதைய வடிவத்தைப் பெற்றன. வொயிட் என்ற ஆட்டக்காரர் விக்கெட்டைவிட இருமடங்கு உயரமான துடுப்பைப் பயன்படுத்தி பெரும் சலசலப்பை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து துடுப்புக்களின் அளவுகளும் வரையறுக்கப்பட்டன.

1810-ம் ஆண்டில் பந்துகளை கையை உயர்த்தி வீசக்கூடாது (Over Arm Bowl) என்ற விதி இருந்தது அக்கால மோசமான ஆடுகளங்களில் இத்தகைய பந்து வீச்சு அபாயகரமானதாகலாம் என்பதும் இதற்கு ஒரு காரணமாகும். 1822-ல் ஜான் வில்லீஸ் என்ற பந்து வீச்சாளர் கையைச் சுழற்றி உயர்த்தி பந்து வீசியபோது அது வேகமாக ஓட்டங்களை எடுக்கத் தடையாக இருப்பதாகமுறையீடு எழவே நடுவர் அதனை தவறானவீச்சு (No Ball) எனத் தீர்ப்பு வழங்கினார். இதனால் மனமுடைந்த வில்லீஸ் இனிமேல் கிரிக்கெட் பக்கமே தலை காட்ட மாட்டேன் எனச் சபதமெடுத்து மைதானத்தை விட்டு வெளியேறினார். எனினும் பலத்த விவாதங்களுக்குப் பின்னர் 1835-இல் இவரின் பந்து வீச்சு சரியானதென ஏற்கப்பட்டது. இதற்கு முன்னர் 1827-ம் ஆண்டில் மூன்று பரிசோதனை ஆட்டங்கள் ஆடப்பட்டன. எதற்காகத் தெரியுமா? கைகளைத் தோள்பட்டைக்கு மேலாக உயர்த்திச் சுழற்றிப் பந்து வீசு வதிலுள்ள சௌகரியங்களை உறுதிப்படுத்தத்தான். இறுதியாக 1864-ம ஆண்டில் Over Arm Bowling சட்டபூர்வ அங்கீகாரம் பெற்றது

1774-ம் ஆண்டின் கிரிக்கெட் விதிகளில் வீரர் ஒருவர் ஆட்டமிழக்கும் முறைகள் தற்போதைய முறைகளை ஒத்தே இருந்தன எல் பி டபிள்யூ (LBW) முறையும் 1774-ல் அறிமுகமானது. இது இன்றும் ஒரு விமர்சனத்திற்குரிய தீர்ப்பாகவே உள்ளது. எல். பி. டபிள்யூ பற்றிக் கூறுகின்றபோது ஒரு சுவையான சம்பவத்தை இங்கு குறிப்பிடுதல் பொருத்தம். 1960-ம் ஆண்டில் பீட்டர் ஜியார்ஜ் என்பவர் ஒரு போட்டியில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தார். தொடர்ந்து மூன்று தடவை பந்து அவரின் காலில் பட, பந்து வீசியவர் எல் பி. டபிள்யூ கேட்டபோது நடுவர் அவுட் கொடுக்கவில்லை. நாலாவது முறையும் பந்து அவரின் காலில் பட துடுப்பாட்டக்

காரரே கிண்டலாக "How is that" என்று கத்திவிட்டார். நடுவர் கத்தியது துடுப்பாட்ட வீரர்தான் என்று தெரியாமலேயே அவுட் கொடுத்து விட்டார்

1859-ல் இங்கிலாந்து அணி முதலில் வெளிநாட்டுப் பயணம் செய்து சர்வதேச கிரிக்கெட்டுக்கு வித்திட்டது. எனினும் அப்போது இங்கிலாந்து அணி பயணஞ் செய்த நாடுகள் கனடாவும் அமெரிக்காவுமதான். அவுஸ்திரேலிய வீரர்கள் தமது இங்கிலாந்து விஜயத்தை 1868-ல் மேற்கொண்டனர். 1873-இல் உத்தியோக பூர்வ County Champion Ship போட்டிகள் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டன.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் எப்போது ஆரம்பிக்கப்பட்டன தெரியுமா? 1877 மார்ச்சில்தான் இப்போட்டி அவுஸ்திரேலியாவின் மெல்போர்ண் (Melbourne) நகரில் இடம் பெற்றது. அவுஸ்திரேலியா இப்போட்டியில் 45 ஓட்டங்களால் வெற்றி பெற்றது எனினும் 1909-ம் ஆண்டில் I. C. C. (Imperial Cricket Conference) நிறுவப்பட்ட பின்னர் தான கிரிக்கெட் மெய்யான சர்வதேசத்துவ நிலையடைந்தது. பிரித்தானிய பொதுநலவாயத் திற்குட்படாத நாடுகளை உள்ளடக்கியபோது இவ் அமைப்பு International Cricket Conference ஆக மாற்றம் பெற்றது.

தற்பொழுது இவ் I. C. C ன் அங்கத்துவ நாடுகள் இடையே டெஸ்ட், மற்றும்ஒரு நாள் சர்வதேசப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இங்கிலாந்து அவுஸ்திலியா நாடுகளிடையே இடம் பெறும் ஆஷஸ் (Ashes Series) தொடர் இவற்றுள் முக்கியமான தாகும் இத்தொடர் ஆஷஸ்என்ற பெயரைப பெற்ற கதையும் மிகச் சுவாரஸியமானது.

1882-ம் ஆண்டில் அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்து சென்றது ஓவல் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் ஏழு ஓட்டங்களால் இங்கிலாந்து அணி தோல்வியுற்றது. இத்தோல்வியை ஸ்போட்டிங் ரைம்ஸ் (Sporting Times) என்ற லண்டன் பத்திரிகை பின்வரும் வேடிக்கை அறிவிப்பு மூலம் வெளியிடப்பட்டது,

"1882 ஆகஸ்ட் 29-ல் ஓவல் மைதானத்தில் மரணமடைந்த இங்கிலாநது கிரிக்கெட்டுக்கு அதன் அன்பார்ந்த நினைவினால் பாதிப்புறற ஏராளமான கிரிக்கெட் ரசிகர்களும் நண்பர்களும் தங்கள் வேதனை கலந்த ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொளகிறார்கள்,"

குறிப்பு: உடல் தகனம் செய்யப்பட்டு சாம்பல் அவுஸதிரேலியாவுக் எடுத்துச செலலபபட்டது.

## வை. சிவநேசன்

இவ் அவமானத்தை இங்கிலாந்து விரைவிலேயே போக்கிக் கொண்டது. அடுத்து வந்த தொடரில் அவுஸ்திரேலியா சென்ற இங்கிலாந்து அணி மெல்போர்ணில் நடந்த டெஸ்டில் வெற்றி பெற்றது. இவ்வெற்றி

யைப் பாராட்டி மெல்போர்ண் நகர மாதர்கள் இங்கிலாந்து கப்டன் Hon Ivo Bligh இடம் ஒரு மண் பாத்திரத்தைக் கையளித்தனர். அதனுள் போட்டியில் பயன்படுத்திய துடுப்பு, பெயில்ஸ் [Bails] என்பவற்றை எரித்த சாம்பல் இருந்தது. Sporting Times கேலியாக வெளியிட்டதை மெல்போர்ண் மாதர் நிஜமாக்கினர். அன்று முதல் இங்கிலாந்து அவுஸ்திரேலியதொடர் 'ஆஷஸ்' எனப்படுகிறது. இம் மட்பாண்டம் இப்போதும் டோட்ஸில் உள்ள Imperial Cricket Memorial Gallery இல் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

இப்பாத்திரத்தைப் போன்றே 'கிரிக்கெட்'டும் இன்னும் பல நூற்றாண்டுகள் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

---

❀ ஆக்கங்களையும் 'உள்ளம்' பற்றிய உங்கள் கருத்துக்களையும் அனுப்பவேண்டிய முகவரி;
ஆசிரியர் குழு,
"உள்ளம்"
வளர்மதி சன சமூக நிலையம்
செம்பியன் லேன்,
கொக்குவில்.

❀ இந்த இதழிலிருந்து இவ்வாண்டு இறுதிவரைக்குமான 'உள்ளம்' இதழ்களைத் தொடர்ந்து படியுங்கள். ஆண்டு இறுதியில் உங்களுக்காகப் போட்டியொன்று காத்திருக்கிறது. மூன்று முத்தான பரிசில்களை வெல்லும் வாய்ப்பு இதுவே.

---

★ ஒரு தரம் சொன்னால் அறிந்து கொள்ளக்கூடியவனுக்கே உபதேசம் செய்வதில் லாபம் உண்டு

★ ஒருவனை உயர்ந்தவனாகவோ உண்டு தாழ்ந்தவனாகவோ மதிப்பது யாருடைய அபிமானத்தாலும்அல்ல தான்செய்யும் காரியத்தாலேயே அவன் பெருமையோ. சிறுமையோ அடைகிறான்.

★ குணத்தால் உயர்ந்தவர்களிடம் உள்ள சிறுகுணங்களும் பெருமை அடைகின்றன. வெண்மலையின் சிகரத்தைத் தொடும் சந்திர கிரகணங்களைப் போல.

# மற்றவருடைய கோணத்திலிருந்து பார்த்தல்

தன்னுடைய படை வீரரின் பெயர்கள், அவர்களின் பெற்றோர் பெயர்கள், சாதனை செய்தவர்களின் பட்டியல், சாதனை செய்தும் மேலிடம் பாராட்டவில்லை என்று பொருமிக்கொண்டிருப்பவர்களின் பெயர்கள் இவற்றை எல்லாம் உரிய படைத் தலைவர்களிடமிருந்து சரியான முறையில் அறிந்து வைத்திருப்பான் நெப்போலியன். அணிவகுப்பைப் பார்வையிடும்போது தளபதியின் சமிக்ஞையைப் பெற்றுக்கொள்வான். உடனே அந்த வீரனிடம்,

"நீ சார்லி அல்லவா? நீ சென்றமாதம் சாதனை ஒன்று செய்தாய் அல்லவா? உன் தந்தை டையனைட் இப்போது பூரண குணமடைந்து விட்டாரா?" என்று அன்புடன் விசாரிப்பான்.

தன்னைப்பற்றித் தலைவர் இவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறார் என்ற செய்தி அந்த வீரனுக்கு மட்டுமல்ல, அருகில் நிற்கும் ஏனைய வீரர்களுக்கும் புதிய உற்சாகத்தைத்தந்துவிடும். அதனால் நெப்போலியனின் வீரர்கள் நெப்போலியனுக்காய் அற்புதமாக உழைத்தார்கள்.

நெப்போலியன் தன்னுடைய கோணத்திலிருந்து அவர்களைப் பார்க்காமல் அவர்களின் கோணத்திலிருந்து தன்னைப் பார்க்க அறிந்திருந்தான். அது அவனது வெற்றிகளுக்கு வழிகோலியது.

தென் ஆபிரிக்காவில் காந்திஜி நடத்திக்கொண்டிருந்த பாடசாலைக்குத் தருநாதர் கோபாலகிருஷ்ண கோகலே விஜயம்செய்தார். அவர் காந்திஜியின் மாணவர்களிடத்தில் ஒரு கேள்வி கேட்டார் "ஒரு காட்டிலே நீங்கள் நடந்து கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு வலப்பக்கத்தில் நாலு அடி தூரத்தில் உங்கள் தந்தை யார் வருகிறார். உங்களுக்கு இடப்பக்கத்தில் நாலு அடி

★ கோகிலா மகேந்திரன் ★

தூரத்தில் உங்கள் தாயார் வருகிறார். திடீரென்று உங்களுக்கு முன்புறம் நாலு அடி தூரத்தில் சிங்கம் ஒன்று வருகிறது. நீங்கள் என்ன செய்வீர்கள்?

மாணவர்கள் யாரும் பதில் சொல்லவில்லை.

கோகலே காந்திஜியைப்பார்த்தார். காந்தி சொன்னார், "நான் நேர்எதிரே சிங்கத்தின் மேல் பாய்ந்து என்னை இழக்கச் சித்தமாகிவிடுவேன். இந்த இடைவெளியில் எனது தாய், தந்தை இரண்டு பேரும் தப்பி விடுவார்கள்."

காந்திஜி எப்போதுமே தன்னை இழக்கவும் மற்றவரின் கோணத்திலிருந்து பிரச்சினையைப் பார்க்கவும் ஆயத்தமாக இருந்தார்.

முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் பிரச்சினை ஏற்பட்ட

போது அவர் முஸ்லிம்களின் கோணத்திலிருந்தே அதனைப் பார்த்தார். இந்தப் பண்புதான் அவரை மகாத்மாவாக உயர்த்தியது.

எமக்குள்ள எதிரிகளின் எண்ணிக்கையைக் குறைத்து, நண்பர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ளக் கூறப்படும் பல்வேறு உளவியல் முறைகளில் முக்கியமானது, ''மற்றவனுடைய கோணத்திலிருந்து பிரச்சினையைப்பார்'' என்பது நடைமுறையில் இதுசற்றுக் கடினமான முறை என்றாலும் காத்திரமான முறை.

மற்றவனுடைய கருத்து ஒருவேளை முற்றிலும் பிழையானதாகவே இருக்கலாம் ஆனால் ஒருவரும் தமது கருத்துப் பிழையானது என்று தெரிந்துகொண்டு சொல்வதில்லை. அவரவர் தமது கருத்துச் சரியானது என்றே நினைத்துக் கொள்கிறார்கள். ஆகவே ஒருவரை மட்டந் தட்டிப் பேசிவிடுவது என்பது எந்த முட்டாளும் செய்துவிடக் கூடிய வேலை. ஆனால், ஒருவரைப் புரிந்து கொள்ளவும் அவரது கோணத்தில் இருந்து பிரச்சினையை விளங்கிக் கொள்ளவும், ஆழ்ந்த நுண்மதியும், பெரிய பண்பும் பொறுமையும் விதிவிலக்கான உயர்ந்த மனிதத்துவமும் தேவை. உயர்ந்த மனிதர்களால் மட்டுமே அவ்வாறு நடந்துகொள்ள முடியும்.

எனக்கு நன்கு தெரிந்த அசிரியை ஒருவர் தனது வீட்டில் நடைபெறும் அதிசயங்கள் பற்றிப் பெருமையாகச் சொல்லிக் கொள்வார். குறித்த மனிதர் ஒருவரின் அருளினாலே தமது வீடு நிறையச் சாம்பிராணி கொளுத்தாமலே.... நறுமணம் வீசுகிறது என்பது அவற்றில் முக்கியமானது. நானும் அவருடைய வீட்டுக்குப் பல தடவை போயிருக்கிறேன், எனக்கு ஒருபோதும் அப்படி ஏதும் மணக்கவில்லை.

அவருடைய வீட்டுக்குச் சென்று வரும் வேறு பலரையும் கேட்டேன். அவர்களும் அப்படி ஏதும் உணரவில்லை

ஆகவே எனக்குத் தெரியும் இது அவருடைய நம்பிக்கை காரணமாக ஏற்பட்ட ஒரு பொய்யான புலனுணர்வு என்று. ஆனால் அதை நான் அவருக்குக் கூறவில்லை. ''உங்களுக்கு ஏதோ ஒரு அருள் லயித்திருக்கிறது'' என்று நான் ஏற்றுக்கொண்டேன். அவருடைய உணர்வு பொய்யானது என்று விஞ்ஞான முறையில் நிருபித்து நான் 'மேல்' என்று காட்டிக் கொள்வதில் வரும் நன்மை ஒன்றுமில்லை. ஆனால் அவருடைய நம்பிக்கையைப் புரிந்துகொண்டு உற்சாகப்படுத்திவிடுவதால் அவர் மகிழ்வாகவும் திருப்தியுடனும் இருக்க நாங்களும் உதவி செய்தவர்களாகிறோம். ஏதோ ஒரு வகையில் மனிதனின் பலவீனங்கள் தானே உலகை ஓட்டிச் செல்கின்றன.

சில சமயங்களில் சிலர் முற்றிலும் தவறான ஓர் அலுவலைச் செய்துவிட்டு வந்து எம்மிடம் அபிப்பிராயம் கேட்பார்கள். 'உங்களுடைய நிலையில் நான் இருந்திருந்தால் நானும் அப்படித்தான் செய்திருப்பேன்' என்பது யாருக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் கூறக்கூடிய ஒரு மந்திர வாக்கியம்.

உண்மையும் அதுதான். அவர் பிறந்த தாய் தந்தையருக்குப் பிறந்து, அவர் வளர்ந்த சூழலில் வளர்ந்து, அவர் படித்த ஆசிரியர்களிடம் படித்து, அவர் பழகிய நண்பர்களுடன் பழகிவந்திருந்தால்...' நாங்களும் அப்படித்தான் நடந்

இருப்போம். பிறகு ஏன் நாங்கள் அவருடன் கோபித்துக் கொள்ள வேண்டும்?

நாங்கள் ஏன் குரைக்கவில்லை. நாங்கள் ஏன மனிதர்களைக் கடிக்கவில்லை? சற்றுச் சிந்திப்போம். நாய்களுக்குப் பிள்ளையாகப்பிறந்திருந்தால் நாங்களும் அதைத்தான் செய்திருப்போம். ஆகவே நாய் குரைக்கிறது அல்லது கடிக்கிறது என்று நாம் அதன்மீது கோபிப்பது நியாயமில்லை. நாம் அதனால் பாதிக்கப்படுவோமாயின் நாயைத் துரத்திவிட, அல்லது நாங்கள் ஒதுங்கிவிட வழி காண்பதுதான் நாங்கள் செய்யக்கூடியது. நாயைத் திருத்த முனைவது வீண்வேலை.

இளங்கோவால் உருவாக்கப்பட்ட கண்ணகி இன்று ஒரு பெருங் காவிய நாயகியாய்ப் போற்றப்படுவதற்கு ... அவளுக்குக் கோவில் அமைக்கப்பட்டு அவள் தெய்வமாக வழிபடப்படுவதற்கு .. முக்கிய காரணம், அவளால் பிரச்சினைகளைத் தனது சொந்தக் கோணத்திலிருந்து மட்டுமல்ல பிறருடைய கோணத்திலிருந்தும் பார்க்க முடிந்தது என்பதுதான். தன்னுடைய வாழ்வைத் தனது நிலைப்பாட்டில இருந்து மட்டும் பார்த்திருந்தால் அவள் கோவலனை ஒரு துரோகியாகக் கண்டிருப்பாள், கண்டிருந்தால் அதனை நாம் குறைசொல்ல முடியாது. ஆனால் அவள் மாதவியின் கோணத்திலிருந்தும் பிரச்சினையைப் பார்த்திருக்க வேண்டும். கோவலனாக நின்றும் அது பற்றிச் சிந்தித்திருக்க வேண்டும். (இளங்கோ அது பற்றிக் கூறாவிடினும்) அதனால்தான் அவர்களை அவள் குறை காணவில்லை. அவர்களை அவளால் மன்னிக்கவும் ஏற்றுக் கொள்ளவும் முடிந்தது.


ஆசிரியர் ஒருவர் மாணவர்களைக் கடுமையாகத் தண்டிப்பார். அவர் வகுப்பைவிட்டு அகன்றதும் வழமையாக அந்த வகுப்பில பல மேசைகளும் கதிரைகளும் முறியும். கதிரை, மேசை முறித்த மாணவர்களை மற்றவர்கள் அடையாளம் காட்ட மாட்டார்கள். அதிபர் போய் வகுப்பு முழுவதற்கும் தண்டனை வழங்குவார். தளபாடச்சேதம் அதிகமாயிற்றே தவிரக் குறையவில்லை. குறிப்பிட்ட ஆசிரியரை அந்த வகுப்பில் இருந்து மாற்றும்படி அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அதிபர் அவ்வாறு செய்த நாள் முதல் அந்த வகுப்பில் எந்தத் தளபாடமும் முறியவில்லை. மாணவர்களுடைய பிரச்சினைகளை அவர்களின் இடத்தில் நின்று பார்க்கவேண்டும்.

ஒரு விடயம் செய்யுமாறு நாம் ஒருவரைக் கேட்பதற்குமுன் ஒரு நிமிடம் தாமதித்து, "அவர் ஏன் அதைச் செய்ய வேண்டும்?" "அவர் ஏன் அதைச் செய்ய விரும்ப வேண்டும்?" போன்ற கேள்விகளை எமக்குள்ளேயே கேட்டு அதற்கான பதிலையும் பெற்றுக்கொள்வது நல்லது.

ஹார்வாட் வியாபாரக் கல்லூரியைச்சேர்ந்த டீன் டொன்ஹாம் சொல்வார், "நான் ஒருவரைச் சந்தித்து உரையாடமுன் அவரது அலுவலகத்துக்கு வெளியே இரண்டு மணி நேரம் நடந்து திரிவேன். நான் என்ன சொல்லப் போகிறேன். அவர் அதற்கு என்ன பதில் தரக்கூடும் என்பது பற்றிய ஒரு தெளிவான எண்ணமின்றி நான் ஒருபோதும் ஒரு மனிதரின் அறையில் நுழைவதில்லை"

அவருடைய வெற்றிக்கு இந்தச் சிந்தனை காரணமாக இருந்திருக்கிறது.

இவ்வுடைய எமது பிரச்சினைகள் எமது கோணத்திலிருந்து பார்க்கப்படும் நாள் எப்போது வரும்?..........




## தற்காலம் - கற்காலம்

நன்றி சிரித்திரன்

1989 ம் ஆண்டு 'உள்ளம்' சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| ஆண்டு இறுதிவரை | (10 மாதங்கள்) | 40 ரூபா |
| அரை ஆண்டு | (6 மாதங்கள்) | 24 ரூபா |
| கால் ஆண்டு | (3 மாதங்கள்) | 12 ரூபா |

(தபாற் செலவுகள் தனி)

நண்பன் 1: வேலை பாக்கிறதெண்டாலும் வாத்திவேலைதான் பாக்கவேணும்

நண்பன் 2 ஏன்ரா மச்சான்

நண்பன் 1: அந்த வேலையிலதான் வருஷத்தில அரைவாசிநாள் லீவிருக்குது

இச்சஞ்சிகை கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தினரால் இல. 225, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள அபிராமி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சகல விதமான புடைவைத் தினிசுகள்

கூறைச் சேலைகள்

சிறுவர் ஆண் பெண்

அனைவருக்குமேற்ற

பெல்ஸ், மிடிஸ்கேட்

றெடிமேட் உடைகளுக்கும்

இறக்குமதி செய்யப்பட்ட

சிங்கப்பூர் நைலக்ஸ்

மக்ஸி ரீசேட்

இன்னும் பல தினிசுகளுக்கு

# மணியம்ஸ்

# ரெக்ஸ்ரைல்ஸ்

16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

கிளை 54 A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

உள்ளம் சிறப்புற எங்கள் வாழ்த்துகள்

மாணவ உலகின் வைர ஏணி

# NIRU TUITION CENTRE

STATION ROAD, — KONDAVIL.

## G. C. E. A/L 1991-ம்

## ஆண்டுக்கான புதிய வகுப்புகள்

மார்ச் மாதம் முதல் ஆரம்பமாகின்றன.

### விஞ்ஞானம்

| | | |
|---|---|---|
| பௌதிகம் | — | சௌந்தி |
| இரசாயனம் | — | செல்வா |
| தூய பிரயோகம் | — | இருஷ்ணா |
| தாவரவியல் | — | பாலா |
| விலங்கியல் | — | ஈசன் ஞானம் |

### கலை, வர்த்தகம்

| | | |
|---|---|---|
| கணக்கியல் | — | மரியதாஸ் |
| பொருளியல் | — | சின்னத்தம்பி |
| வர்த்தகம் | — | தேவா |
| புவியியல் | — | வேலா |
| இந்து நாகரீகம் | — | அருள்தங்கை |
| தமிழ் | — | குழந்தை |
| அரசியல் | — | மஃறூப் |
| அளவையியல் | — | எஸ். எஸ். மனோகரன் |

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் கல்வி கற்பிக்கப்படுகின்றன.

G. C. E. A/L 89, 90 வகுப்புகளும்
89 வினா விடை வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன.

★ கடந்தகாலப் பெறுபேறுகள் நிகழ்காலத்திற்கு சான்றாகும். ★

மேலதிக விபரங்கட்கு

நிர்வாகி

நிரு ரியூசன் சென்ரர்

கோண்டாவில்.